வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள
ந.க.எண். 3487 /அ1/2024 நாள். 23 .08.2024

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி – உதவியாளர் / இளநிலை உதவியாளர் / தட்டச்சர் / சுருக்கெழுத்து தட்டச்சராக பணிபுரியும் பணியாளர்கள் தகவலின்றி பணிக்கு வராமல் இருப்பவர்கள் / அனுமதிக்கப்பட்ட விடுப்பு முடிந்து பணிக்கு வராமல் இருப்பவர் – விவரம் கோருதல் – சார்ந்து

பார்வை : 1.அரசாணை (நிலை)எண்.1046 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தம் (FR.III) துறை நாள்.13.11.1987

2.சென்னை.6. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 055604/அ4/இ3/2024 நாள்.22.08.2024

-----

பார்வையில் காணும் அரசாணை /செயல்முறைகளின்படி பள்ளிக் கல்வித்துறையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் உதவியாளர் / இளநிலை உதவியாளர் / தட்டச்சர் / சுருக்கெழுத்து தட்டச்சராக பணிபுரியும் பணியாளர்கள் தகவலின்றி பணிக்கு வராமல் இருப்பவர்கள் / அனுமதிக்கப்பட்ட விடுப்பு முடிந்து பணிக்கு வராமல் இருப்பவர்கள் மீது பார்வையில் காணும் அரசாணை / அரசு கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு அடிப்படை விதி 18யினை மீறியதற்காக அப்பணியாளர்கள் மீது தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17 இன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே, பள்ளிக் கல்வித்துறையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் உதவியாளரைக பணிபுரியும் பணியாளர்கள் தகவலின்றி பணிக்கு வராமல் இருப்பவர்கள் / அனுமதிக்கப்பட்ட விடுப்பு முடிந்து பணிக்கு வராமல் இருப்பவர்கள் விவரம் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தில் அனுப்பிட தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகின்றது.

படிவம்.1. உதவியாளர்

| வ.எண். | பணியாளர் பெயர்/ பணிபுரியும் அலுவலகம் | எந்த நாள் முதல் விடுப்பு | தகவலின்றி விடுப்பு / அனுமதிக்கப்பட்ட விடுப்பு முடிவுற்று பணிக்கு வரவில்லை | அலுவலக தலைவர் மேற்கொண்ட நடவடிக்கை விவரம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | | | | | |

படிவம்.2.இளநிலை உதவியாளர் / தட்டச்சர்/ சுருக்கெழுத்து தட்டச்சர்

அரசாணை நிலைஎண்.151, பள்ளிக் கல்வித்(வரவு/செலவு–1) துறை நாள்.09.09.2022இன்படி உதவியாளர் / இளநிலை உதவியாளர் / தட்டச்சர் / சுருக்கெழுத்து தட்டச்சராக பணிபுரியும் பணியாளர்கள் தகவலின்றி பணிக்கு வராமல் இருப்பவர்கள் / அனுமதிக்கப்பட்ட விடுப்பு முடிந்து பணிக்குவராமல் இருப்பவர்கள் அனுமதிக்கப்பட்ட விடுப்பு முடிந்து பணிக்கு வராமல் இருப்பவர்கள் மீது தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17 இன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு அப்பணியாளர்களின் விவரம் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தில் அனுப்பிட தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகின்றது.

| வ.எண். | பணியாளர் பெயர்/ பணிபுரியும் அலுவலகம் | எந்த நாள் முதல் விடுப்பு | தகவலின்றி விடுப்பு / அனுமதிக்கப்பட்ட விடுப்பு முடிவுற்று பணிக்கு வரவில்லை | முதன்மைக் கல்வி அலுவலர் மேற்கொண்ட ஒழுங்கு நடவடிக்கை விவரம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | | | | | |

மேற்காணும் விவரங்களை 27.08.2024க்குள் தவறாமல் இவ்வலுவலகத்திற்கு அனுப்பிட வேண்டும் என சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. இப்பொருள் சார்ந்து காலதாமதம் தவிர்க்கப்பட வேண்டும் என்றும்,பணியாளர்களின் பெயர் விடுபட்டால் சம்பந்தப்பட்டதலைமை ஆசிரியர்களே முழுப் பொறுப்பேற்க வேண்டுமெனவும் திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

//ஒப்பம்//

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்

பெறுநர்,
அனைத்து உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.